கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்

மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்

அவ.எண். 231/2015

2020 ம் ஆண்டு 03.03.2020 பி.வா.சா. 5

சாட்சியின் சாட்சியம் திரு.பி.கருணாநிதி , பி.எ.பில்., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் சுகுமார் | தொழில் |
| க/த/பெ பத்மநாபன் | கிராமம் |
| வயது | தாலுகா |
| ஜாதி | மாவட்டம் |
| சமயம் | |

முதல் விசாரணை

சத்தியமாக சொல்கிறேன். நான் இந்த வழக்கில் 9ம் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை சத்தியப்பிரமாண நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதையே எனது சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அத்துடன் எனது தந்தையாருக்கு 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரத்தின் சான்று நகல் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ 10. எனது தந்தையார் எனக்கு கடந்த 23.01.2004ம் தேதி எழுதி வைத்த செட்டில்மென்ட் ஆவணத்தின் சான்று நகல் பி. வா.சா.ஆ 11. சொத்துவரி ரசீதுகள் பி.வா.சா.ஆ 12. மின் கட்டண ரசீது பி.வா.சா.ஆ 13. மேற்படி எனது சாட்சியத்தையும் சான்றாவணங்களையும் ஏற்றுக்கொண்டு கேட்டுள்ள பரிகாரங்களை வழங்கி உத்தரவிடுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

(வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)